**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 147** **நாள்: 19.09.2018**

**வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்–2019 பணிகளை பார்வையிட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்பேரில், வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்–2019, 01.01.2019யை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு கடந்த 01.09.2018 துவங்கி நடைபெற்று வருகிறது. அதன் ஒருபகுதியாக கடந்த 01.09.2018 அன்று சென்னை மாவட்ட தேர்தல் அலுவலல் மற்றும் ஆணையர் அவர்களால் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி வரைவு வாக்காளர் பட்டியலினை பொதுமக்களும், சம்பந்தப்பட்டவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் பார்வையிட்டு பெயர்கள் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் ஒரே தொகுதிக்குள் இடமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான படிவங்களை 31.10.2018 வரையிலான காலத்திற்குள் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

நான்கு சிறப்பு முகாம்களில் முதல் சிறப்பு முகாம் கடந்த 09.09.2018 அன்று நடந்தது. மீதமுள்ள சிறப்பு முகாம்கள் 23.09.2018, 07.10.2018 மற்றும் 14.10.2018 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளன. இந்தச் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்–2019 பணிகளைப் பார்வையிட வாக்காளர் பட்டியல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்காக திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில திட்ட கமிஷன், எழிலகம், சென்னை–5 அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பாக பொதுமக்களோ அல்லது சம்பந்தப்பட்டவர்களோ புகார் அல்லது ஆலோசனைகளை தெரிவிக்க விரும்பினால், பெருநகர சென்னை மாநகராட்சி கட்டணமில்லா தொலைபேசி எண். 1913, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலக எண். 044–2530 3600, தலைமை தேர்தல் அலுவலர் தமிழ்நாடு அலுவலக எண்.1950 ஆகிய தொலைபேசி எண்களிலும்,

மேலும், சென்னை மாவட்ட தேர்தல் அலுவலக மின்னஞ்சல் chennaideo2017@gmail.com மூலமாகவும், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர், மாவட்ட தேர்தல் அலுவலகம், ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003 என்ற அலுவலக முகவரியிலும் தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**